
கர்த்தருக்காக பொறுமையாக
என்றென்றும் காத்திருப்பேன்

கர்த்தருக்காக பொறுமையாக

Sat 14 APR '07

July

4

Wednesday

Wk-27 • 185-180

40 சங்கீதம்

கர்த்தருக்காக பொறுமையாக எந்நாளும் காத்திருப்பேன்
என்னிடமாக சாய்ந்து எந்தன் ஜெபத்தைக் கேளுமய்யா

பயங்கரமான குழியிலிருந்தும்
உளையான சேற்றிலிருந்தும்
என்னை தூக்கியெடுத்து உறுதிப்படுத்தி
என் கால்களைக் கன்மலையின் மேல் நிறுத்தும் (கர்த்தருக்காக)

தேவனைத் துதிப்பதற்கும்
அவரையே ஆராதிப்பதற்கும்
எந்தன் நாவில் புதுப்பாட்டைக் கொடுத்து
மகிமையிலே என்னை பாட நிறுத்தும் (கர்த்தருக்காக)

எந்தன் பலிகளையும்
நான் படைக்கும் காணிக்கையையும்
நீர் விரும்பாமல், என் செவிகளை திறந்து
உம் வேதத்தை என் உள்ளத்தில் இருத்தும் (கர்த்தருக்காக)

உம் நீதியை பிரசங்கிப்பதற்கும்
உம் மகிமையை சொல்வதற்கும்
என் இருதயத்தில் உம் கிருபை தந்து
பிரியமானதைச் செய்யச் சொல்லும் (கர்த்தருக்காக)

எந்தன் தாழ்மையைப் பாரும்
எந்தன் எளிமையைப் பாரும்
கர்த்தர் என்மேல் நினைவாய் இருந்து
சீக்கிரமாய் விடுவித்து எடுத்துக்கொள்ளும் (கர்த்தருக்காக)

KJC-DNN

